**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 231/2009

Deposition Of Witness for
{ Prosecution PW 4
Defense
Court

Name திரு. புகாரிசரீப்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2023

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of January 2023.

நான் திருநெல்வேலி மாவட்டம் முகாமி நகர் கேடிசி நகரில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் ஒரு ஹோட்டலில் கேசியராக வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இதற்கு முன்பு 2005,2006ஆம் ஆண்டு நானும் அசா1 மற்றும் அசா3 ஆகியோர்கள் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தோம். 2006ம் ஆண்டு கீழகாடுவெட்டி கிராமத்தில் சுமார் 80ஏக்கர் அளவில் நிலங்கள் வாங்கி பிளாட் போட்டு விற்பனை செய்தோம். மேற்படி கிரயத்தை கிரய ஆவணம் எண்கள் 751/2006,752/2006,753/2006 என 3 பத்திரமாக பதிவுசெய்தோம்.

மேற்படி 80 ஏக்கர் நிலத்தில் 11 சர்வே நம்பர்கள் இருந்தது. மேற்படி நிலங்கள் கீழகாடுவெட்டி கிராமத்தின் சர்வே எண்கள் 22 முதல் 26 வரை ,32 முதல் 38 வரை அமைந்திருந்தது. மேற்படி சர்வே எண்களில் உட்பிரிவுகளும் இருந்தது, தற்போது சரியாக ஞாபகமில்லை. 15.08.2008ம் தேதி நானும், அசா1, அசா3 ஆகியோர்கள் நாங்கள் வாங்கிய நிலத்தை வியாபார நிமித்தமாக பார்க்க சென்றோம். அப்போது நாங்கள் வைத்திருந்த அடையாள கற்கள் அகற்றப்பட்டிருந்தது.

எனவே நாங்குநேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று நாங்கள் வாங்கிய நிலத்தை பற்றி விசாரணை செய்த போது மேற்படி நிலம் ஆவுடையம்மாள் என்பவர் ஆஜர் எதிரிகளுக்கு போலி பவர் பத்திரம் அளித்ததாக தெரிந்துகொண்டோம். மேற்படி போலி அதிகார ஆவண எண் 398/2008 ஆகும்.

இதுகுறித்து விசாரிப்பதற்காக 08.09.2008ம் தேதி நானும், அசா1, அசா3ஆவுடையம்மாள் வீட்டிற்கு சென்றோம். அப்போது ஆவுடையம்மாள் வீட்டில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் அருவாள் மற்றும் கம்பால் எங்களை

தாக்கவந்தார்கள். மேற்படி சொத்திற்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள். இதுகுறித்து நாங்கள் மூவரும் மூன்றடைப்பு காவல்நிலையத்தில் சென்று புகார் அளித்தோம். புகார் தனியாக கொடுத்தோமா சேர்ந்து கொடுத்தோமா என்று ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அசாஆ1 புகார் மனுவில் உள்ள 3வது கையெழுத்து என்னுடையது தான்.போலிஸ் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

} CC.No. 231/2009

Deposition Of Witness for { Prosecution PW 3 / Defense / Court

Name திரு. செய்யது இப்ரகிம்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2023

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of January 2023.

நான் திருநெல்வேலியில் பா்கிட் மாநகரில் வசித்து வருகிறேன். ஆஜா் எதிரிகளை தெரியும். இதற்கு முன்பு நானும் அசா1 மற்றும் புகாரிசரீப் ஆகியோா்கள் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தோம். 2006ம் ஆண்டு கீழகாடுவெட்டி கிராமத்தில் சுமாா் 80ஏக்கா் அளவில் நிலங்கள் வாங்கி பிளாட் போட்டு விற்பனை செய்தோம். மேற்படி கிரயத்தை கிரய ஆவணம் எண்கள் 2751/2006,2752/2006,2753/2006 என 3 பத்திரமாக பதிவுசெய்தோம்.

மேற்படி 80 ஏக்கா் நிலத்தில் 11 சா்வே நம்பா்கள் இருந்தது. மேற்படி நிலங்கள் கீழகாடுவெட்டி கிராமத்தின் சா்வே எண்கள் 22,23,24,25,26,32,33,34,35,36,37,38 அமைந்திருந்தது. மேற்படி சா்வே எண்களில் உட்பிரிவுகளும் இருந்தது, தற்போது சரியாக ஞாபகமில்லை. 2008ம் ஆண்டு நான் நான்குநேரி பத்திர பதிவு அலுவலகத்தில் மேற்படி பிளாட் போட்ட நிலங்களை விற்பனை செய்ய விசாரித்தபோது அங்கு அலுவலகத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சுமாா் 80 ஏக்கால் நிலத்தையும் போலிஅதிகார ஆணவம் மூலமாக சூரப்பபுரத்தை சோ்ந்த ஆவுடையம்மாள் மூலம் ஆஜா் எதிரிகள் இருவரும் அதிகாரம் பெற்றதாக தெரிந்துகொண்டேன். மேற்படி போலி அதிகார ஆவண எண் 398/2008 ஆகும்.

இதுகுறித்து விசாரிப்பதற்காக 08.09.2008ம் தேதி நானும், அசா1, புகாரிசரீப் சூரப்பப்புரத்தை சோ்ந்த ஆவுடையம்மாள் வீட்டிற்கு சென்றோம். அப்போது ஆவுடையம்மாள் வீட்டில் ஆஜா் எதிரிகள் இருந்தாா்கள். நாங்கள் உங்களுக்கு பாத்தியமில்லாத சொத்துக்கு எப்படி பவா் பத்திரம் அளித்தீா்கள் என்று கேட்டோம். அப்போது ஆவுடையம்மாள் மற்றும் ஆஜா் எதிரிகள் அருவாளுடன் மேற்படி நிலங்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் அந்த நிலத்தில் நாங்கள் இறங்கினாள் கொலைசெய்து விடுவோம் என்று மிரட்டினாா்கள்.

இதுகுறித்து நாங்கள் மூவரும் மூன்றடைப்பு காவல்நிலையத்தில் சென்று புகார் அளித்தோம். புகார் தனியாக கொடுத்தோமா சேர்ந்து கொடுத்தோமா என்று ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அசாஆ1 புகார் மனுவில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான்.போலிஸ் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.